# வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனி - 2012

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் மூலதன செலவினத்திற்காக அரசாங்க மானியங்கள் தொடர்பான நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள், காசோட்டம் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

காணி கையேற்பதற்காக பிரதேச செயலகமொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த பணம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 8,801,648 ஆகவும் பிரதேச செயலகத்தின் மீதி உறுதிப்படுத்தற் கடிதத்தின் பிரகாரம் ரூபா 8,028,052 ஆகவும் காணப்பட்டமையால் ரூபா 773,596 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடுமின்றி அவதானிக்கப்பட்டது.

#### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | வியாபார மற்றும் ஏனைய | 45,895,528 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பெறவேண்டிய தொகை | | |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய தொகை | 50,463,740 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| (இ) | சுங்கக் கட்டண மீளளிப்பு | 41,833,127 | சுங்கக் கட்டண கொடுப்பனவு ஆவணங்களின் மூலப்பிரதி மற்றும் உரிய உபகரணங்கள் என்பன பண்டாரநாயக்க விமான நிலையத்தின் II ஆம் கட்டத்தின் I ஆம் படிமுறை அபிவிருத்தி செயற்திட்டத்தினால் பொறுப்பேற்றதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், கம்பனியின் மூலதன செலவினத்திற்கான அரசாங்க மானியங்கள் தொடர்பான செயற்பாடுகளில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 782,480 ஆன தேறிய மிகையாக இருந்தது. அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 5,772,870 ஆன தேறிய மிகையானமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 4,990,390 ஆன வீழ்ச்சியொன்றை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மிகை வட்டி வருமானம் ரூபா 5,075,507 ஆல் குறைவடைந்தமை இவ்வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் II ஆம் கட்டத்தின் I ஆம் படிமுறையின் கீழான நிர்மாணிப்புக்கள் மற்றும் பொருத்துதல் வேலைகள் 2007 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்டு இறுதிக் கொடுப்பனவுகள் உட்பட நிறுத்தி வைத்தல் தொகை என்பன முழுமையாக குறித்த ஒப்பந்தக்காரருக்கு செலுத்தி பொறியியலாளரின் செயற்திட்ட நிறைவு அறிக்கையும்

(Engineer's Project Completion Report) 2007 யூலை மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்தது. அந்நிர்மாணங்களுக்குரிய சுங்கக் கட்டண மீளளிப்பு தொடர்பாக காரணங்களைக் காட்டி 2010 ஆம் ஆண்டின் போது கம்பனியால் ரூபா 192,000,000 தொகையை திறைசேரியிடமிருந்து பெறப்பட்டு அதில் 2010 ஆம் 2012 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 98,000,000 தொகையும் ரூபா 41,833,127 தொகையுமாக மொத்தம் ரூபா 139,833,127 தொகை ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் செயற்திட்டம் முடிவடைந்து 05 ஆண்டுகளின் பின்னர் அந்த ஒப்பந்த செயற்பாட்டிற்காக உருவாக்கப்பட்டிருந்த அந்த வெளிநாட்டு நிர்மாண ஒப்பந்த நிறுவனத்தின் நிலைத்திருதன்மை மற்றும் சுங்க கொடுக்கல்வாங்கல்களின் சரியான தன்மை தொடர்பாக போதிய உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் ரூபா 139,833,127 தொகை செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக கணக்காய்வின் போது இணங்க முடியாமல் இருந்தது.

## 3.2 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கம்பனியின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஎவ்/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக கம்பனிக்குரிய கீழே காட்டப்பட்டுள்ள வளங்கள் அரசின் வெவ்வேறு அமைச்சுக்களுக்கும் வேறு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

| <u>விடயங்கள்</u> | <u>அவதானிப்புக்கள்</u> |
|---|---|
| (அ) மனித வளங்கள் | மீளாய்வாண்டினுள் கம்பனியின் பதவியணியில் 25 பேர் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 24 பேருக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 13,360,008 தொகை கம்பனியால் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) மோட்டார் வாகனங்கள் | கம்பனிக்குரிய 06 மோட்டார் வாகனங்கள் வரிசை அமைச்சிற்கும் மேலும் ஒரு வாகனம் வேறொரு அமைச்சிற்கும் வழங்கப்பட்டிருந்தது. அதில் 06 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் எரிபொருள் செலவினத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,515,252 தொகை கம்பனியால் செலவிடப்பட்டிருந்தது. |

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கம்பனித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) காணிகளை சுவீகரித்தல் மற்றும் மீள ஒப்படைத்தல்
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) தீர்வை வரிகளும் வரி மீளளிப்புக்களும்